DECEMBER 2024 **U/ID 33209/UCT2D**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 30 சொற்களில் விடை எழுதுக.

1. நாட்டுப்புறவியல் என்றால் என்ன?
2. பண்ணத்தி குறிப்பு வரைக.
3. மலையருவி நூலின் ஆசிரியர் யார்?
4. பழமொழியாவது யாது?
5. வள்ளைப் பாட்டு என்பது என்ன?
6. தெம்மாங்கு குறித்தெழுதுக.
7. தாலாட்டுப் பெயர்க் காரணம் யாது?
8. ஏற்றப்பாட்டின் சிறப்பினைக் கூறுக.
9. வாலப் பகடை இடம்பெறும் கதைப் பாடல் எது? ஏன்?
10. சிலம்பாட்டம் குறிப்பு வரைக.
11. கனவுத் தொடர்பான நம்பிக்கையை எழுதுக.
12. மிருகக்கதைகள் குறித்தெழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 200 சொற்களில் விடை எழுதுக.

13. நாட்டுப்புற இலக்கியம் குறித்து அறிஞர்களின் கருத்துகளை விளக்குக.

14. தமிழில் நாட்டுப்புற இலக்கியம் பெற்றுள்ள வளர்ச்சியை விவரிக்க.

15. நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகளை விளக்குக.

16. தாலாட்டுப் பாடல்களின் சிறப்பை விளக்குக.

17. நாட்டுப்புற ஆண்கள் ஆட்டம் குறித்தெகுதுக.

18. நாட்டுப்புற அகவிளையாட்டுக்கள் யாவை? விளக்குக.

19. நாட்டுப்புற நம்பிக்கைகளின் மரபுத் தன்மையைக் கட்டுரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடை எழுதுக.

20. இந்திய நாட்டுப்புற இயலின் வரலற்றைத் தொகுத்துரைக்க.

21. நாட்டுப்புறவியலின் இலக்கியக் கூறுகளை விவரிக்க.

22. தமிழில் அமைந்துள்ள புராணக் கதைப் பாடல்களை விளக்குக.

23. நாட்டுப்புறக் கைவினைக் கலைகளைத் தொகுத் தெழுதுக.

24. நாட்டுப்புறவியல் உணர்த்தும் மானுடவியல் சிந்தனைகள் யாவை? விளக்குக.

———————